**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி–பிப்ரவரி 2022**
**D021 இலக்கணம்–3 (பொருள்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இருவகைப் பொருள் யாவை?
2. முதற்பொருளில் அடங்கும் இரு பொருள்கள் எவை?
3. களவு – வரையறை தருக.
4. உவர்த்தல் என்றால் என்ன?
5. உடன்போக்கின் வகைகள் எத்தனை?
6. அகப்பாட்டினுள் வரும் பொருள்கள் எவை?
7. தபுதார நிலை என்றால் என்ன?
8. தொல்காப்பியர் கூறும் அகத்திணை எத்தனை? புறத்திணை எத்தனை?
9. வெட்சி எந்த அகத்திணையின் புறன்?
10. 'கரந்தைப் போரில் மறவர் இறத்தலும் உண்டு' என்பதைச் சுட்டும் துறை யாது?
11. 'உழுபுல வஞ்சி' எதனைச் சொல்கின்றது?
12. மகளிரொடு தொடர்புடைய காஞ்சித் துறைகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
13. தும்பைப் போர் எதைப் பொருளாகக் கொண்டு நிகழ்த்தப்படுகிறது?
14. மண்ணுமங்கலம் என்றால் என்ன?
15. வெளிப்பட இரத்தல் என்றால் என்ன?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. அகப்பொருள் – 'அகம்' என்பதன் பொருள் யாது?
2. ஊடல் தணிக்கும் வாயில்கள் யாவர்?
3. வரைவு மலிதல் – விளக்குக.
4. அகமே தமிழ் என்பதற்குச் சான்று தருக.
5. புறம் என்பதன் விளக்கம் யாது?
6. எதை அரசியல் கற்பு என்பர்?
7. தொல்காப்பியர் 'தேர் மறம்' என்னும் துறையை ஏன் சுட்டவில்லை?
8. கற்பு முல்லை என்பதற்கு கூடுதலாகத் தரப்படும் இரு விளக்கங்களைக் குறிப்பிடுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) அகத்திணை ஒழுக்கம் குறித்து விளக்கி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) ஊடல் தீர்க்கும் வாயில்கள் குறித்து கட்டுரை தருக.

2. (அ) இறைச்சிப் பொருள் குறித்து நம்பியகப்பொருள் கூறுவன யாவை?

   (அல்லது)

   (ஆ) இலக்கணத் தோற்றம் குறித்து கட்டுரை எழுதுக.

3. (அ) வஞ்சிப் போருக்கு முந்தைய நிகழ்வுகள் குறித்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) பரிசில் வேண்டுதல் குறித்து புறப்பொருள் வெண்பாமாலை கூறுவன யாவை?

***